<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 99/2023**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 10.02.2026.**

| | |
|---|---|
| **Name : சண்முகம்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

1) நான் தற்போது தம்மம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022-ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வளாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.09.2022-ம் தேதி மேச்சேரி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சீனிவாசன் ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த குணசீலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.454/2022 u/Sec. 147, 294(பி), 323, 324, 341, 506(1) IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 2** ஆகும்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 17.09.2022 ம் தேதி காலை 8 மணிக்கு சம்பவ இடம் குணசீலன் வீட்டருகில் சென்று சாட்சிகள் பொன்இருசன் மற்றும் வனிதா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 4** மற்றும் **அ.சா.ஆ 5** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் குணசீலன், கந்தாயி, பழனிசாமி, விஜயா, விஜயக்குமார், பூபாலன், பழனியம்மாள். சின்னசாமி, ஜெயா, கமலா, பொன் இருசன், வனிதா, மருத்துவர் மோகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த குணசீலன், கந்தாயி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றார். குணசீலன், கந்தாயி என்பவர்களுடைய விபத்து பதிவேடு முறையே விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6 மற்றும் 7** ஆகும். இவ்வழக்கில் காயம் பட்ட கந்தாயி என்பவர் தற்போது வயது முதிர்வு காரணமாக இறந்துவிட்டார்.

5. இவ்வழக்கின் எதிரிகள் கடந்த 30.09.2022- ம் தேதி கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரிகள் மீது கடந்த 20.10.2022-ம் தேதி **நி.கு.எண்.454/2022 u/Sec. 147, 294(பி), 323, 324, 341, 506(1) IPC லிருந்து u/Sec. 147, 294(பி), 323, 324, IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.**8 ஆகும்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>. இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**